Cambridge Assessment International Education

# Cambridge International AS Level

**TAMIL LANGUAGE** **8689/22**

Paper 2 Reading and Writing **May/June 2022**

INSERT **1 hour 45 minutes**

**INFORMATION**
- This insert contains the reading passages.
- You may annotate this insert and use the blank spaces for planning. **Do not write your answers** on the insert.

**தகவல்**
- இந்த இணைப்பில் படிக்கும் பகுதிகள் இணைக்கப்பட்டுள்ளன.
- இந்த இணைப்புப் பகுதியில் விடைக்கான குறிப்புகளை. வெற்றிடத்தில் குறித்துக்கொண்டு திட்டமிடலாம். ஆனால் கேள்விக்கான **விடைகளை இங்கே எழுதக்கூடாது**.

This document has **4** pages. Any blank pages are indicated.


© UCLES 2022
[Turn over

## பகுதி 1

கட்டுரை ஒன்றைப் படித்துவிட்டு **1, 2, 3 கேள்விகளுக்குக்** கேள்வித்தாளில் விடை அளிக்கவும்.

**கட்டுரை 1**

### தெருவோர சிறு வியாபாரிகள்

செல்வி, கோயில் பூசைகளைப் பார்த்துவிட்டு காரில் ஏறுவதற்காக கோயிலைவிட்டு வெளியில் வந்தபோது, அவளது கண்களில் அந்த தோல் சுருங்கிய, தலைமுடி நரைத்த பாட்டி தென்பட்டாள். கொளுத்தும் வெயிலில், புழுதி படிந்த தெருவில், மூலையோரமாக, மற்றைய தெருவோர வியாபாரிகளின் வரிசையில் இந்த பாட்டியும் மிகவும் சிறிய எண்ணிக்கையில் எதையோ விற்றுக்கொண்டிருப்பது செல்வியின் கண்களில் பட்டது. மற்றைய தெரு வியாபாரிகள் மேசைகளில் பொருட்களை வைத்து விற்கும்போது, பாட்டி மட்டும் தெருவில் உட்கார்ந்து, தனக்கு முன்னால் ஒரு சிறிய பெட்டியை வைத்து, அதன்மேல் கவர்ச்சி அற்ற பொருட்களை வைத்திருந்தாள். தூரத்தில் இருந்து பார்க்கும்போதே அவள் விற்பது பழங்கள் என்று செல்விக்குத் தெரிந்தது. சிறிய பழங்களைத் தனியாகவும் பெரிய பழங்களைத் தனியாகவும் பாட்டி பிரித்து வைத்திருந்தாள்.

எந்தப் பெரிய கடைகளிலும் விற்காத, இலந்தைப் பழம், ஈச்சம் பழம், நாவற்பழம் போன்ற மலிவான, கிராமப்புறம் சார்ந்த நாட்டுப் பழங்கள் பாட்டியின் முன்னால் பரத்தி வைக்கப்பட்டிருந்தன. செல்விக்கு அந்தப் பழங்களைப் பார்க்கும்போது, பாடசாலை சென்ற தனது சிறுவயது நினைவுகள் அவள் கண் முன்னால் வந்தன. பாடசாலை வாயிலில் இப்படித்தான் ஒரு பாட்டி பழங்களை வைத்துத் தினமும் விற்பாள். தனக்கு பெற்றோர் தரும் சிறிய கைப்பணத்தில் அவளிடமிருந்து பழங்கள் வாங்குவது நினைவில் வந்தது.

பாட்டியிடம் எதுவும் வாங்காது கடந்து செல்ல செல்விக்கு தயக்கமாக இருந்தது. அவளிடமிருந்து பழங்கள் சிலவற்றை வாங்குவது பாட்டிக்கு பண ரீதியாக உதவுவது போல் இருக்கும் என்று செல்வி எண்ணினாள். பல தெரு வியாபாரிகளுக்கு மத்தியில் வியாபாரப் போட்டியோடு அமர்ந்திருக்கும் பாட்டியைப் போன்றவர்களுக்கு அவர்களிடமிருந்து பொருட்களை வாங்குவது உற்சாகத்தைக் கொடுக்கும் ஒரு செயலாகவும் அமையும் என்றும் செல்வி எண்ணினாள். உள்ளூர் விவசாயிகளையும் உள்ளூர் உற்பத்திகளையும் ஊக்குவிக்கும் ஒரு செயலாகவும் அது அமையும் என்று செல்விக்கு நன்கு தெரியும். தன்னிடமிருந்த பணத்தைக் கொண்டு பாட்டியிடமிருந்த பழங்களை வாங்கியபோது செல்வியின் மனதில் திருப்தியும் மகிழ்ச்சியும் ஏற்பட்டன.

பெரிய சூப்பர் மார்க்கெட்டில் பொருட்களை வாங்கிப் பழகிய செல்வி போன்றவர்கள் இத்தகைய தெரு வியாபாரிகளிடம் பொருட்களை வாங்குவது இன்றைய காலக்கட்டத்தில் அரிதாகி விட்டது. செல்வந்தர்கள் பலர் தெருவோர சிறு வியாபார்களிடம் பொருட்களை வாங்குவதைத் தமது தகுதிக்கு அப்பாற்பட்டதாகக் கருதுகின்றார்கள். அத்துடன், தெருவோர வியாபாரிகளது பொருட்களின் தரம் குறைவானது, சுகாதாரமற்றது என்ற எண்ணமும் பல பணம் படைத்தவர்கள் மத்தியில் நிலவுவது குறிப்பிடத்தக்கது.

## பகுதி 2

இப்பொழுது இரண்டாம் கட்டுரையை படித்துவிட்டு **4, 5 கேள்விகளுக்குக்** கேள்வித்தாளில் விடை அளிக்கவும்.

**கட்டுரை 2**

### சிறுவியாபாரங்கள் தொடங்கப்படுவதற்கான காரணங்கள்

சிறு வியாபாரிகள் ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் எத்தகைய பங்களிப்பைச் செய்கின்றனர் என்பதை அரசும் மக்களும் உணரத் தவறுகின்றனர். இதனால், நாட்டில் வேலைவாய்ப்பின்மை, வறுமை, உணவின்மை போன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது கடினமாக இருக்கின்றது. சிறு வியாபாரிகள் பெரும்பாலும் பல மக்கள் கூடும் இடங்களில் தமது கடைகளை நிறுவுகின்றனர். இதனால், பல மக்களுக்கும் வேலைக்குச் செல்லும் அவசர நேரத்தில், கட்டுப்படியான விலைக்கு உணவுப் பொருட்களையும் வேறு பல பொருட்களையும் விற்கின்றார்கள். அன்றாடத் தேவைக்கு வேண்டிய பால், பழம், பலசரக்கு, மாவு போன்ற பொருட்கள் இவர்களிடமிருந்து கிடைக்கின்றன. இவர்கள் ஈட்டும் வருமானமானது அவர்களது குடும்பத்துக்குத் தேவையான அன்றாட செலவுகளுக்கு உதவுவதாக இருக்கும்.

இல்லத்தரசியான வினிதா மாத இதழொன்றில் கூறியதை இங்கு குறிப்பிடுதல் பொருத்தமானது. ‘கணவரும் பிள்ளைகளும் வீட்டில் இல்லாதபோது எமது வீட்டின் முன்னால் பொருட்களை விற்கும் சிறு வியாபாரிகள் இருப்பதால் அது எனது தனிமையையும் பயத்தையும் எப்போதும் நீக்க உதவும். இந்த உணர்வு எனக்கு மட்டுமானதல்ல. பல இல்லத்தரசிகள் இதே மாதிரியான உணர்வைக் கொண்டிருக்கிறார்கள். அத்துடன் எமது வீட்டிற்குள்ளோ தெருவுக்குள்ளோ அந்நியர்கள் எவரும் வரும்போது இவ் வியாபாரிகள் அவர்களை அவதானிப்பதால் நமக்கு பாதுகாப்பு அதிகரிக்கின்றது. அவர்கள் எமது வீட்டின் வெளியில் தொழில் புரிவது, வீட்டிற்குள்ளும் என்னுடன் யாரோ இருப்பது போன்ற உணர்வை எனக்குத் தரும். அவர்களினால் எமது தெரு எப்போதும் கலகலப்பாகத் தோற்றம் தரும். அவர்களுள் பலர் பல ஆண்டுகளாக இதே தெருவில் தொழில் புரிவதால், அவர்களுக்கும் என்னை நன்றாகப் பழகிப்போய் விட்டது’.

அகிலன் தெருவில் மீன் விற்கும் சிறுவியாபாரிகளுள் ஒருவன். அவனுக்கு தனது வாடிக்கையாளர்களின் விருப்பு வெறுப்பு நன்கு பழகிவிட்டது. ஆறுகளிலிருந்தும் கடலிலிருந்தும் பலவகையான மீன்களைக் கொண்டுவந்து வாடிக்கையாளர்களின் தேவைக்கேற்ப விற்பதில் அவன் கைதேர்ந்தவன். நாள் கூலியில் வசிப்பவர்களின் வருமானத்திற்கு ஏற்றதாக சிறிய அளவில் மீனை அவர்களுக்கு விற்பதில் அகிலன் சிறந்தவன். மேலும், மலிவு விலையில் மீனை அவர்களுக்கு விற்கிறான்.

தெருவோர சிறு வியாபாரிகளின் வாழ்க்கை மிகவும் கடின வேலையும் சிரமங்களும் கொண்டது. நகரத்தின் மத்தியிலுள்ள சந்தையில் உணவுப் பொருட்களை விற்கும் முருகன் அதிகாலை மூன்று மணிக்கே எழுந்து காய்கறிகளைக் கழுவி, சுத்தம் செய்து, துண்டுகளாக வெட்டி தயார் செய்வான். பின்னர், சந்தைக்குக் கொண்டு செல்வதற்கான பெட்டிகளிலும் கூடைகளிலும் அடுக்கி வைப்பான். நாள் முழுவதும் வியாபாரத்தில் ஈடுபடும் அவன் வேலை முடிந்து வீடு செல்ல இரவு பத்து மணியாகிவிடும். மிகுந்த களைப்புக்கு மத்தியிலும், கொண்டு சென்ற பெட்டிகளைக் கழுவி, அடுக்கி வைத்துவிட்டு படுக்கும்போது அவனது உடல் வலியால் சிரமப்படும். கடும் மழையிலும் சுடும் வெயிலிலும் வேலை செய்யாவிட்டால் அவனை நம்பியுள்ள அவனது குடும்பம் உணவின்றி தவிக்க வேண்டி வரும் என்ற எண்ணமே அவனை தினமும் கவலைப்படுத்தி வேலை செய்யும் நிர்ப்பந்தத்துக்கு ஆளாக்கியிருந்தது.

**BLANK PAGE**

Permission to reproduce items where third-party owned material protected by copyright is included has been sought and cleared where possible. Every reasonable effort has been made by the publisher (UCLES) to trace copyright holders, but if any items requiring clearance have unwittingly been included, the publisher will be pleased to make amends at the earliest possible opportunity.

To avoid the issue of disclosure of answer-related information to candidates, all copyright acknowledgements are reproduced online in the Cambridge Assessment International Education Copyright Acknowledgements Booklet. This is produced for each series of examinations and is freely available to download at www.cambridgeinternational.org after the live examination series.

Cambridge Assessment International Education is part of Cambridge Assessment. Cambridge Assessment is the brand name of the University of Cambridge Local Examinations Syndicate (UCLES), which is a department of the University of Cambridge.